1970 மார்ச் 12]

திரு. இல. பலராமன் : இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் இந்தக் கல்வி மானியத்திற்காக எவ்வளவு ஒதுக்கீடு செய்கிறது? அது நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்ற விவரங்களை அரசு தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கிடைக்கக்கூடிய எந்தத் தொகையையும் நல்லமுறையில்தான் பயன்படுத்துகிறோம். ஆனால் எவ்வளவு தொகை கிடைக்கிறது என்ற விவரம் இல்லை.

பனையப்பட்டிக்கு பேருந்து நிலையம்

*** 343 வின—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள பனையப்பட்டியில் பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) பனையப்பட்டி பஞ்சாயத்து அவ்வூரில் ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்காக ரூ. 21,700 அரசினரிடம் கடன்கேட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளருக்கு செயற்குறிப்பு அனுப்பி உள்ளதாக, மாவட்ட ஆட்சியாளர் அறிவித்துள்ளார். அந்த செயற்குறிப்பு கிராம நல இயங்குநர் வழியாக அரசினருக்கு வந்தவுடன் கடன் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பனையப்பட்டியில் பேருந்து நிலையம் அமைப்பது சம்பந்தமாக மாவட்டத் தலைமையிடம் மீண்டும் கேட்டு விரைவில் அமைத்துத்தர அரசு முற்படுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : புதுக்கோட்டை உதவி ஆட்சியாளர் கடன் கோரிக்கையை மாவட்ட ஆட்சியாளரின் வழியாக அரசுக்கு அனுப்பியுள்ளதாகத் தகவல் கிடைத்தது. மேற்கண்ட கடன் கோரிக்கை இந்தத் துறைக்கு வந்து சேர்ந்ததும் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

புதுக்கோட்டைப் பகுதியை மேம்படுத்த நிதி ஒதுக்கம்

*** 344 வின—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்டார வளர்ச்சித் திட்டம் (Area Development Scheme) என்பதின் கீழ் மிகவும் பிற்பட்ட புதுக்கோட்டைப் பகுதிக்கு அரசு, கூடுதல் நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் 1968-69, 1969-70ல் ஏதேனும் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன :—

(1) புதுக்கோட்டை கோட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் உபரிப் பொது நிதிகளிலிருந்து, பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கும் இணைப்புச் சாலைகள் போடுவதற்கும் தேவையான நிதிகள் எடுத்துப் பயன்படுத்தப்படும்.

(2) புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் தேவையான நிதிகள், வறட்சித் துயர் தணிப்புக்கு ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து பயன் படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

(3) வரவு-செலவு திட்டத்தில் கிடைக்கும் நிதிகளிலிருந்து, சிறு பாசன வாயில்களுக்குத் தேவையான நிதிகள், தலைமைப் பொறியாளரால் ஒப்பளிக்கப்பட வேண்டும்.

(4) பயிர்ப் பாதுகாப்புப் பணியின் கீழ் சீரணித் தொண்டர் களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் தேவையான நிதிகள் 'சீரணி' என்றத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பயன்படுத்திக்கொள்ளப்பட வேண்டும். அதற்குத் தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, ஆலங்குடி, திருமயம், குளத்தூர் கூற்றங்களைத் தன்னகத்தேகொண்ட புதுக்கோட்டைப் பகுதியை மாநில அளவில் பின் தங்கிய பகுதியாகக் கருதி, அரசுச் சார்பில் கூடுதல் நிதியை ஒதுக்கி முன்னேற்றம் செய்யமுற்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தமிழ்நாட்டிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் சில பகுதிகள் மிகமிகப் பின்தங்கியதாகத்தான் கருதி அதற்கேற்ற வகையில் ஊராட்சி ஒன்றியங்கள் ஏ, பி, சி, டி என்று 4 பிரிவுகள் அமைக்கப்பட்டு, தேவையான நிதி ஒதுக்கப் படுகிறது. ஆகவே இதற்கான தனிப்பட்டமுறையில் எந்தவித செயற்குறிப்பும் அரசிடம் இல்லை.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, மாநிலத்தில், பிற்படுத்தப்பட்ட பகுதி என்று மாநில அரசு ஏதாவது வைத்திருக் கிறதா ? அப்படிப்பட்ட பிற்பட்ட பகுதிகளுக்கு மத்திய சர்க்கார் பல மாநிலங்களுக்கு நிதி உதவி அளிப்பதாக அறிகிறோம். நம்முடைய மாநிலத்திற்கும் நிதி கேட்டிருக்கிறோமா ? அதை அளிக்க மத்திய அரசு ஆலோசனை சொல்லி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி, நிரந்தரமாகப் பிற்படுத்தப்பட்ட பகுதியெல்லாம் வருவாய்த் துறை மூலம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்னிடத்தில் தகவல் இல்லை.

1970 மார்ச் 12]

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, வறட்சிப் பகுதியாக உள்ள இடங்களில், யூனியன் பொது நிதியிலிருந்து கிணறுவெட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டு கிணறு வெட்டுவது நடைபெறுகின்றது. ஆனால் தண்ணீர் இருக்கின்ற நிலைமையை அறிந்துசொல்ல 'வாட்டர் டிவைனர்' நீர் ஊற்றை ஆராய இருக்கிறார்கள். அவர்களைக் கலக்காமல், சில இடங்களில் தோண்டப்பட்டு தண்ணீர் வராமல் தடைப்பட்டிருக்கிறது. அதுபோன்ற நிலைமைகள் இல்லாமல் வறட்சியான பகுதிகளில் கிணறு தோண்டும்பொழுது நீர் ஊற்றை ஆராய்ந்தபிறகு கிணறு வெட்ட முன் வர ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்த முறைகளெல்லாம் பின்பற்றப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் எந்தவகையிலும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தண்ணீர் இருக்கிறதா என்று பரிசீலித்துப் பார்த்து ஆய்வாளர்கள் செய்தபிறகும் சில கிணறுகளில் தண்ணீர் வராமல் போய்விடுவதும் உண்டு.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களை ஏ, பி, சி, டி, இ என்ற பிரிவுகளாகப் பிரிக்கும் பொழுது ஏற்கனவே இருந்த அரசு அதை உண்மைக்குப் புறம்பான வகையில், பாரபட்சம் காட்டியதாகப் பரவலாகப் பேச்சு அடிபடுகிறதே. எனவே, உண்மையை ஆராயும் வகையில் அதைப் புனராய்வு செய்து, உண்மையாகவே எந்தெந்தப் பகுதிகள் பிற்பட்ட பகுதிகள் என்று அறிந்து, அதற்கேற்றாற்போல் பிரிவுகளை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி ஒன்றியங்களைத் தரம் பிரிக்க, ஆரம்பக்காலத்திலே ஏற்படுத்திய நடவடிக்கைகளெல்லாம் அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு வருகின்ற வருமானம், ஊராட்சி ஒன்றியத்தினுடைய பரப்பளவு, அங்கிருக்கும் மக்கள் தொகை ஆகிய அடிப்படையில் தான் ஏ, பி, சி, டி என்று பிரித்து; ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ற வகையில் மானியம் ஒதுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. படிப்படியாக சில இடங்கள் வளர்ச்சியுற்று, சில ஊராட்சி ஒன்றியங்கள் வளம் பெற்றிருக்கின்றன. சில பகுதிகள் எவ்வளவு செலவழித்தும் இன்னும் முன்னேற முடியாமல் இருக்கின்றன. ஆகவே, எந்த வகையிலே திருத்தியமைக்கலாம் என்பதைப்பற்றி அரசு கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

Posts of Additional Personal Assistants to Collectors.

* 345 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether the Government have decided to revive the posts of Additional Personal Assistant (Panchayat Development Works) for the District Collectors in the districts of Tamil Nadu;